இணைப்பு I.

(129-ம் பக்கத்திலுள்ள 52-ம் எண்ணுள்ள வினாவின் விடையைக் காண்க.)

1955 ஆம் ஆண்டு தீண்டாமை ஒழிப்புச் சட்டத்தின் கீழ் உள்ள தற்போதைய விதி முறைகள்.	இந்த அரசால் மத்திய அரசுக்கு யோசனை கூறப்பட்ட திருத்தங்கள்.
(1)	(2)
1. முதன் முறையாக செய்யப் படும் எல்லாவகையான குற்றங்களுக்கு 6 மாதம் வரையிலும் சிறைவாசத் தண்டனை அல்லது ரூ. 500 வரையிலும் அபராதம் அல்லது இரண்டும்.	1. 1955-ஆம் ஆண்டு தீண்டாமை ஒழிப்பு சட்டத்தின் கீழ் வரும் குற்றங்களுக்கு, பதிவு செய்யக் கூடிய காரணங்கள் தவிர குறைந்தபட்சம் மூன்று மாத சிறைவாசத் தண்டனையும், ரூ. 50 அபராதமும் விதிக்கப் படலாம். (தற்போது குறைந்த பட்ச தண்டனைக்கு சட்டத்தில் விதி செய்யப்படவில்லை.)
	2. அதிகப்படியாக விதிக்கக்கூடிய தண்டனையாக இப்போதுள்ளபடி ஆறுமாத சிறைவாசமே தொடர்ந்து இருக்கலாம். ஆனால் ரூ. 500 வரை அதிகப்படியாக அபராதம் விதிக்கலாம் என்று உள்ளதை ரூ. 200-க்கு குறைக்கப்படலாம்.
2. ஒரு தடவைக்குமேல் குற்றம் செய்பவர்களுக்கு ஒவ்வொரு குற்றத்திற்கும் — சிறைவாசமும் அபராதமும்.	3. தீண்டாமை ஒழிப்புச் சட்டத்தின் கீழ் இரண்டாம் முறையாக குற்றம் செய்பவருக்கு ஆறு மாதம் முதல் ஒரு வருடம் வரை சிறைத் தண்டனையும், அபராதம் ரூ. 200 முதல் ரூ. 500 வரையும், விதிக்கப் படலாம்.
	4. மூன்றாவது முறையாகவும் அதற்கு மேலும் தொடர்ந்து குற்றம் செய்பவருக்கு, குறைந்தது ஒரு ஆண்டு சிறைவாசமும் அதிகப்படியாக 3 ஆண்டு சிறைவாசமும், ரூ. 500 முதல் ரூ. 1000 வரை அபராதமும் விதிக்கப்படலாம்.